# கலன்பிந்துனுவெவ பிரதேச சபை

## அனுராதபுரம் மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 செப்தெம்பர் 17 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 யூன் 19 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 நவம்பர் 13 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் காணப்படும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் காரணமாக கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள கலன்பிந்துனுவெவ பிரதேச சபையின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது என்னால் அபிப்பிராயமொன்றை தெரிவிக்க முடியாதுள்ளது.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) ரூபா 100,000 பெறுமதிகள் நூலகப் புத்தகங்களின் இருப்பு மற்றும் பெறுமதி தீர்மானிக்கப்படாத 21 நிலையான சொத்து விடயங்கள் கணக்குகளுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நடைமுறைப் பொறுப்பாகக் காண்பிக்க வேண்டிய ரூபா 4,175,207 தொகை நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிராததுடன் நடைமுறைச் சொத்துக்கள் ரூபா 207,000 இனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் குழாய்க் கிணறு வருமானம் ரூபா 114,149 அதிகரித்தும் கடை வாடகை வருமானம் ரூபா 90,400 தொகை குறைத்தும் கணக்கு வைக்கப்பட்டிருந்தன.

(ஈ) மூலதன ஈடுபடுத்துதலுக்கான வருமானப் பங்களிப்புக் கணக்கின் மீதி மற்றும் நிலையான சொத்துக் கணக்கின் மீதி என்பன ஒன்றுக்கொன்று சமமாக இருக்க வேண்டிய போதிலும் ரூபா 152,258 தொகையான வேறுபாடு காணப்பட்டது.

**1.3.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 3,619,930 கூட்டுத்தொகையான 07 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த/மெய்மையாய்வு செய்ய முடியாதிருந்தது.

**2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு**

**2.1 நிதிப் பெறுபேறுகள்**

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 373,652 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 1,901,271 ஆக இருந்தது.

**2.2 நிதிக் கட்டுப்பாடு**

பின்வரும் நிதிக்கட்டுப்பாட்டு குறைபாடுகள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) செல்லுபடிக் காலத்தை விஞ்சிய ரூபா 123,942 பெறுமதியான 52 காசோலைகள் தொடர்பாக இலங்கைக் குடியரசின் நிதிப்பிரமாணம் 396(ஈ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிருவாகம்) விதி இல. 180 இன் பிரகாரம் காசு அல்லது களஞ்சிய செயற்பாடுகளில் ஈடுபடுகின்ற உத்தியோகத்தர்கள் அல்லது வருமானம் தொடர்பான கடமைகளை நிறைவேற்றுகின்ற உத்தியோகத்தர்களினால் பிணை வைப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) 2006 இன் 10 ஆம் இலக்க முத்திரைக் கட்டண (விஷேட ஏற்பாடுகள்) அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் ரூபா 21,520 தொகையான முத்திரைக் கட்டணம் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை.

## 2.3 வருமான நிருவாகம்

### 2.3.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| (i) | வீதவரியும் வரியும் | 1,117 | 1,070 | 2,551 |
| (ii) | வாடகை | 2,115 | 2,351 | 395 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 755 | 734 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 7,126 | 7,171 | 2,310 |

### 2.3.2 வாடகை

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 159(i) ஆம் பிரிவின் பிரகாரம் ரூபா 3,463,161 தொகையான நிலுவை வாடகையை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3.3 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா 1,792,575 ஆக இருந்தது.

## 2.4 போதியளவான அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

இலங்கைக் குடியரசின் தாபன விதிக்கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 13.7 ஆம் பிரிவின் பிரகாரம் முறையான நியமனமின்றி செயலாளர் பதவியில் பதிற்கடமை சம்பளமாக அபிவிருத்தி உதவியாளருக்கு 06 வருடங்களுக்காக ரூபா 280,420 கூட்டுத்தொகையானது செலுத்தப்பட்டிருந்தது.

## 2.5 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிருவாகம்) விதி இல. 203 மற்றும் 214 ஆம் விதிகளின் பிரகாரம் சபையின் களஞ்சியம், ஆதனங்கள், சொத்துக்கள் மற்றும் ஏனைய பதிவேட்டுப் பொருட்கள் தொடர்பாக சரி பிழை பார்ப்பதற்காக வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) உள்ளூராட்சி ஆணையாளரின் 1994 ஆகஸ்ட் 04 ஆந் திகதிய என்சீபீ/பீஎல்/4/7/19 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் பிரகாரம் சபைக்குச் சொந்தமான கடைகள் 05 வருடங்களுக்கு ஒரு தடவை மதிப்பீடு செய்யப்பட்டு வாடகை திருத்தம் செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) எதிர்வரும் வருடங்களின் செயற்பாடுகளுக்குரிய திட்டங்களை உள்ளடக்கி கூட்டிணைந்த திட்டமும் அமுல்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்ட செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கான செயல்நடவடிக்கைத் திட்டமும் தயாரிக்கப்பட்டு அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 2.6 சபைக்கு எதிரான சட்ட நடவடிக்கைகள்

(அ) செயற்திட்டமொன்றின் நிர்மாணம் தொடர்பான உடன்படிக்கையின் பிரகாரம் கொடுப்பனவு செய்யப்படாமல் தவிர்ந்திருந்தமை தொடர்பாக வெளித்தரப்பினர்களினால் சபைக்கு எதிராக நட்டஈடு கோரித் தொடுக்கப்பட்ட வழக்குத் தீர்ப்பின் பிரகாரம் சபையினால் நட்டஈடு செலுத்த வேண்டியேற்பட்டிருந்ததுடன் மேலும் செலுத்த வேண்டிய நட்டஈடுட்டுத் தொகை ரூபா 4,175,206 ஆகக் காணப்பட்டது.

(ஆ) மத்திய சுற்றாடல் அதிகார சபையின் பிளிசறு செயற்திட்டத்திற்காக 2011 ஆம் ஆண்டின் போது கிடைத்த ரூபா 1,280,163 தொகை வங்கி நடைமுறைக் கணக்கில் வைப்புச் செய்யப்பட்டிருந்தது. ஒப்பந்தக்காரரினால் சபைக்கு எதிராகத் தொடுக்கப்பட்ட வழக்கின் பிரகாரம் அனுராதபுரம் மாவட்ட நீதிமன்றத்தினால் இந்த வங்கிக் கணக்கு தடை செய்யப்பட்டிருந்தது.

## 2.7 ஒப்பந்த நிருவாகம்

மகநெகும கிராமிய வீதி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் அமுல்படுத்தப்பட்ட ரூபா 5,700,000 கிரயமான 17 செயற்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிருவாகம்

(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்